ஈழமுரசு

Redacteur: K. Jeisanthar
Editor in chief: K. Jeisanthar
ஆசிரியர்: கி.ஜெய்சந்தர்

அனைத்து தொடர்புகளுக்கும்:
MAISON DES MEDIAS
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE **Gratuit**
22, Rue Perdonnet,
75010 Paris, France
Tel: 00 33 1 40 05 95 15
Fax: 00 33 1 40 05 95 16
இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு:
E.Mail-eelamurazu@gmail.com
விளம்பர விநியோக தொடர்புகட்கு:
E.Mail-eelamurazuadm@gmail.com

**Impression / Printer:**
News Fax International
Unit 16, Bow Industraial Park
London E15 2DZ

பிரித்தானியா:
**Eelamurasu Weekly**
E.Mail-eelamurazu.uk@gmail.com
**078 8679 0198**
MOHAN

கனடா:
2390 Eglinton ave east #230,
Toronto, ONT M1K 2P5.
Tel: 416 752 4846 / 416 8573 941
Fax: 416 752 4136

அவுஸ்திரேலியா:
P.O Box 1327
Glen Waverley
Victoria 3150
Tel: 61 3 8802 8368
Fax: 61 3 9803 4932

**சந்தா விபரம்**
**(அஞ்சற் செலவு மட்டும்)**
**வருட சந்தா**
**பிரான்ஸ் 60€**
**ஐரோப்பா 65€**
**ஏனைய நாடுகள் 70 €**

**குறிப்பு:**
இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு. ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

**CENTRE DE BEAUTE INDIEN**



**தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்.**
**தொடர்புகளுக்கு : பாலன்**
**33, rue Philippe de Girard**
**75010 Paris, M° : La Chapelle.**
**Tel : 06 63 01 75 80**

# உலக வரலாற்றில் புதிய விசித்திரம்....

இந்நிலையில், தற்போது மீண்டும் சர்வதேசத்தை ஏமாற்ற 'போர்க் குற்ற நல்லிணக்க விசாரணைக் குழு' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தக்குழு விசாரணைகளை மேற்கொள்ளும் என அறிவித்து அதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபை ஏற்பாடு செய்யவுள்ள விசாரணைக் குழுவை தடுத்து நிறுத்துவதற்கு சிறீலங்கா அனைத்து வழிகளிலும் இறங்கியுள்ளது.

'குற்றம் செய்தவர்களைத் தேடிக்கண்டு பிடித்து அவர்களைத் தண்டிப்பது என்பது எமது கலாசாரத்தில் இல்லை' எனத் தெரிவித்துள்ள ஐ.நாவுக்கான சிறீலங்காத் தூதுவர் பாலித ஹோகன்ன, 'சர்வதேச அமைப்பொன்று விசாரணை நடத்துவது பொருத்தமற்ற செயல்' எனவும் ஐ.நாவிற்கு கூறியுள்ளார்.

இது குறித்து ஊடகம் ஒன்றிக்கு அவர் கருத்து தெரிவிக்கையில், எம்மால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் விசாரணை செய்ய முழுமையான அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நீதிமன்றத் தன்மை உள்ள ஒரு ஆணைக்குழு. இந்நிலையில் ஐ.நா. சபை நிபுணர் குழுவை நியமிப்பது என்பது பொருத்தமற்ற விடயம். இவ்வாறு ஒரு குழுவை நியமிக்க முயல்வது குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தச் செய்யும் என்று கூறிய அவர், தம்மால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு யுத்தம் தொடர்பான விடயங்களை ஆராயும். அப்போது மனித உரிமைகள், விழுமியங்கள், மனித உரிமைச் சட்டம் எங்கெல்லாம் மீறப்பட்டது என்பது குறித்து ஆராயும். அதற்குப் பொறுப்பானவர்கள் குறித்துக் கண்டறிந்து அவர்கள் தொடர்பில் பரிந்துரை செய்யும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு இழப்பீட்டைப் பரிந்துரை செய்யும் என்று கூறிய அவர், எங்களுடைய சொந்தப் பிரச்சினைகளை நாமே பார்த்துக் கொள்வோம் என்றும் கூறியுள்ளார்.

இந்நிலையில், கடந்த ஓரிரு தினங்களுக்கு முன் ஐ.நா. பொதுச் செயலர் பான் கி மூன் அவர்களை சந்தித்த சிறீலங்கா வெளி நாட்ட மைச்சர் பீரிஸ், பான் கி மூன் குழு அமைப்பதை நிறுத்தவேண்டும் என்று நேரடியாகக் கேட்டுக்கொண்டார். ஆனால் இவரது கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுத்த பான் கி மூன், குழு அமைப்பதனை நிறுத்த முடியாது என்றும் கூடவே தமது குழு மகிந்த அமைக்கும் ஆணைக்குழுவினையும் கண்காணிக்கும் எனவும் பதலளித்துள்ளார். இவரது இந்தக் கருத்தினால், மனமுடைந்த நிலையில் ஊடகவியலாளர் மாநாட்டில் பங்கேற்றிருந்த பீரிஸ், உள்நாட்டில் தலையிடுவதனை ஐ.நா மற்றும் வெளிநாடுகள் நிறுத்த வேண்டும் என்றும் எச்சரிக்கைத் தொனியில் கூறிவிட்டு, இந்நாடுகள் அபிவிருத்திக்கு உதவ வேண்டும் என்றும் கோரியுள்ளார். அத்துடன், மேலும் சில கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் சீற்றத்துடன், அங்கிருந்து வெளியேறியுள்ளார்.



## பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின்

# 2 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான
பிரிகேடியர் பால்ராஜ் (கந்தையா பாலசேகரம்) அவர்களின்
2 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு
வரும் 30.05.2010
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு
சங்கொலி தேச விடுதலைப் பாடற்போட்டி நடைபெறும் சென்தனி
எல்.எஸ்.ஸி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கடந்த 20.05.2008 அன்று சுகயீனம் காரணமாக பால்ராஜ்
அவர்கள் தாயகத்தில் சாவடைந்திருந்தார்.



***(நினைவு வணக்க நிகழ்வு நடைபெறும் முகவரியை 2 ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ள சங்கொலி தேச விடுதலைப் பாடற்போட்டி விளம்பரத்தில் பார்க்கவும் )***

இதற்கிடையே, நிபுணர் குழு அமைக்கும் திட்டத்தை ஐ.நா. செயலாளர் கைவிடக்கூடாது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது. இலங்கையின் உள்நாட்டு யுத்தத்தின்போது இடம் பெற்றதாகக் கூறப்படும் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக பதிலளிக்கும் கடப்பாட்டைத் தேடும் முயற்சியை கைவிட வேண்டாம் என ஐ.நா. விடம் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கையொன்றையும் விடுத்துள்ளதுடன், ஆதாரபூர்வமான போர்க் குற்றம் படங்கள் சிலவற்றையும் வெளியிட்டுள்ளதுடன், மேலும் பல ஆதாரங்கள் தங்களிடம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து அமெரிக்காவின் யுத்தக் குற்றங்களுக்காக தூதுவர் ஸ்டீபன் ரெப் அடுத்தமாதம் 16ம் திகதி தனது அறிக்கையை சமர்பிக்கவுள்ளார் என 'ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அது மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு: இலங்கை மீது இன்னமும் செல்வாக்குச் செலுத்தும் நிலையில் அமெரிக்கா உள்ளது. இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக பங்காளியாக அமெரிக்கா விளங்குகிறது. மேலும் 'சர்வதேச நெருக்கடிக் குழு' தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள இருவரையும் விசாரிப்பதற்கான நியாயா திக்கம் அமெரிக்காவுக்கு உள்ளது. இருவரையும் அமெரிக்க அதிகாரிகள் கடந்த வருடம் விசாரணை செய்தனர். எனினும், இதன்மூலம் சிறிய இராஜ தந்திர சர்ச்சை மாத்திரமே உருவானது. எவ்வாறயினும், இந்தக் கதை இத்துடன் முடிவடைந்துவிடவில்லை. யுத்தக் குற்றங்களுக்கான அமெரிக்கத் தூதுவர் இலங்கை குறித்த தனது அறிக்கையை அடுத்த மாதம் 16ம் திகதி சமர்ப்பிக்கவுள்ளார். பிரஸல்ஸைத் தளமாகக் கொண்ட சர்வதேச நெருக்கடிக் குழு கடந்த செவ்வாய்க்கிழமை 'இலங்கையில் யுத்தக் குற்றங்கள்' என்ற அறிக்கையை வெளியிட்டது. எனினும் எப்போதும்போல சிறீலங்கா அரசு பிடிவாதமாக உள்ளது. அது இதுவரை சட்ட விசாரணைகளையோ, சர்வதேச தடைகளையோ எதிர்கொள்ளவில்லை. சமீபத்திய அறிக்கைகள் காரணமாக சிறீலங்காவின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்படப்போவதில்லை. ராஜபக்சவின் தேர்தல் வெற்றிகள் அவரது கையைப் பலப்படுத்தியுள்ளன. இதன் காரணமாக சர்வதேச விசாரணைகள் குறித்து அவர் அஞ்சப்போவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.